ஆயர் திருமுகம்
Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay

Pastoral Letter No/GR/45/2021

# ஆயர் திருமுகம்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

நாம் கடவுளோடு கொண்டுள்ள உறவை வலுப்படுத்தவும், சக மனிதர்களோடுள்ள ஒன்றிப்பை உண்மையாக்கவும், இயற்கையோடுள்ளத் தொடர்பை உறுதிப்படுத்தவும் பேருதவியாக இருப்பது செபம். அதுவே நம் அன்றாட அருள்வாழ்வை ஆழப்படுத்தி தூய வாழ்வு நோக்கி அழைத்துச் செல்கின்றது. நம் செப அனுபவம் எப்படியோ அப்படியே நமது வாழ்வும் அமைகின்றது. ஏனென்றால் நம் செபங்கள்தாம் கடவுளின் அன்புத் திட்டத்தை நிறைவேற்றும் உந்துசக்தி. இதனை வலியுறுத்தும் விதமாக திருத்தந்தை புனித 12 - ஆம் பயஸ் “செபிக்காத மனிதன் வேரில்லா மரத்திற்குச் சமம்” என மொழிந்தார்.

செபம் நம் வாழ்வின் தேவை மட்டுமல்ல; தேடலாக வேண்டும். இத்தேடல் இயேசுவால் தேர்ந்தெடுக்கப்பட்டத் திருத்தூதர்களுக்கும் இருந்தது. எனவேதான் அவர்கள் இயேசுவிடம் “யோவான் தம் சீடர்களுக்கு இறைவனிடம் வேண்டக் கற்றுக் கொடுத்ததுபோல் எங்களுக்கும் கற்றுக் கொடும்” (லூக் 11:1) என்று வேண்டினர். அந்த வேளையில் இயேசு கற்பித்த அதே வேண்டுதலையே இன்றும் நாம் செபிக்கின்றோம். இயேசு கற்பித்த செபம் i) கடவுளைப் புகழ்தல், ii) இறையாட்சியைத் தேடுதல், iii) இறைத்திட்டத்திற்கு ஒத்துழைத்தல், iv) அடிப்படைத் தேவைகளை நினைவுகூர்தல், v) பகைவரை மன்னித்தல், vi) நாள்தோறும் நம்பிக்கையில் வளர்தல், vii) சோதனைகளில் விழாது விழிப்புணர்வோடு வாழ்தல் எனும் மனநிலைகளை நமக்குள் புகுத்துகின்றன.

தற்போது நாம் பயன்படுத்தி வருகின்ற **“ஈசோ கற்பித்த செபம்“** மற்றும் **“மங்கள வார்த்தை செபம்“** ஆகியவை திருவிவிலியத்தின் புதிய மொழிபெயர்ப்புக்கேற்பவும், நமது

அன்றாட சொல்லாடலுக்கேற்பவும் நமது வழிபாட்டு முறைப்படி சில மாற்றங்களோடு வெளிவந்துள்ளது. அதன் விளக்கங்களை இம்மடல் வழியாக உங்களுக்கு வழங்குகின்றேன்.

**ஈசோ கற்பித்த செபம்**

**விண்ணுலகில்** ***(பரலோகத்தில்)*** **இருக்கின்ற**

நாம் எப்போதெல்லாம் இந்த செபத்தைச் சொல்லி செபிக்கின்றோமோ அப்பொதெல்லாம் நாம் இயேசுவோடு இணைந்து வானகத் தந்தையை நோக்கி மன்றாடுகின்றோம் என நினைவில் கொள்வோம். இங்கே குறிப்பிடப்படுகின்ற விண்ணகம் என்பது ஏதோ வேறு ஓர் உலகத்தைக் குறிப்பது அன்று மாறாக கடவுளின் உடனிருப்பும், மாட்சியும், தூய்மையும் நிறைந்த நிலை. அன்பிலும், பரிவிலும், நீதியிலும், உண்மையிலும் நிலைத்து வாழ்வோரின் மனநிலை. அந்த மனநிலை கடவுளுக்கு மட்டுமல்ல, நமக்குள்ளும் இருக்க வேண்டுமென்ற உணர்வை இச்சொல் நமக்கு அறிமுகப்படுத்துகின்றது.

**எங்கள் தந்தையே** ***(பிதாவே)***

இறைவாக்கினர்களின் எழுத்துகளும் யூதர்களின் பார்வையும், கடவுள் கடந்து நின்று செயல்படுபவராக, வானங்களுக்கு அப்பால் இருந்து மக்களைக் கண்காணிப்பவராகச் சித்தரித்தன. ஆனால் இயேசு கடவுளை ஆள் உறவில் பார்த்து ‘தந்தையே’ என்று அழைத்து உறவு கொண்டாடினார். நாம் ஒவ்வொருவரும் கடவுளின் அன்பிற்குரியப் பிள்ளைகள். அந்த ஆழ்ந்த உறவுக்கு உயிரூட்டம் வழங்குவதுதான் ‘தந்தையே’ என்றத் தனியன்புச் சொல். ‘எங்கள் தந்தையே’ என வேண்டும்போது நாம் எல்லாரும் உடன்பிறப்புகள் கடவுள் நம் எல்லாருக்கும் தந்தை என்ற உண்மை இங்கே புலனாகிறது. இது திருமுழுக்கினால் நாம் ஒவ்வொருவரும் பெற்ற பெரும்பேறு.

**உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக** ***(உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்டுவதாக)***

“இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே” (விப 3:14) எனத் தம் பெயரை மோசேக்குச் சொன்னக் கடவுள் “நாம் தூயவர்” (லேவி 11:44) எனத் தமது இயல்பையும் திருவிவிலியத்தின் பல்வேறு இடங்களில் வெளிப்படுத்துகின்றார். கடவுளின் பெயரைத் தூயது எனப் போற்றுதல் தலைசிறந்த இறைப்புகழ்ச்சி ஆகும். அது மட்டுமன்றி அவரது மக்களாகிய நாமும் தூயோராக வாழ வேண்டும் என்பதே அவரது திருவுளம் (லேவி 19:2, எபே 1:4, 1தெச 4:3).

**உமது ஆட்சி *(இராச்சியம்)* வருக**

இயேசு சுட்டிக்காட்டிய இறையாட்சி என்பது ஒரு தனிப்பட்ட ஆட்சி அமைப்பு அல்ல. மாறாக எல்லா மனிதர்களையும் உள்ளடக்கிய ஆண் - பெண், உயர்ந்தவர் - தாழ்ந்தவர், பணக்காரர்- பாமரர், கற்றவர் - கல்லாதவர் என்ற வர்க்கப் பேதமற்ற சமத்துவ நிலை. இது அன்றாட அருள்வாழ்வோடும், இயேசுவின் வருகையோடும் தொடர்புடையது. இயேசுவின் இரண்டாம் வருகையை நம்பிக்கையோடு எதிர்கொள்ளும் திரு அவையின் எதிர்பார்ப்பும் இதுவே. இதனையே 'ஆண்டவராகிய இயேசுவே வாரும்' என திருவெளிப்பாடு 22:10 -இல் சொல்லி மன்றாடுகின்றோம்.

**உம்முடைய திருவுளம் *(சித்தம்)* விண்ணுலகில் நிறைவேறுவதுபோல, மண்ணுலகிலும் *(பூலோகத்தில் செய்யப்படுவதுபோல)* நிறைவேறுவதாக**

உலகில் வாழும் "எல்லா மனிதரும் மீட்புப் பெற வேண்டும்" (1திமொ 2:4) என்பதே இறைத்தந்தையின் திருவுளம். தந்தையின் திருவுளத்தை முழுமையாக நிறைவேற்றவே இயேசு வந்தார். அந்த இயேசுவோடு, அன்னையாம் புனித கன்னி மரியா மற்றும் புனிதர்களின் எடுத்துக்காட்டான வாழ்வைப் பின்தொடர்கின்ற நாமும், நமது திட்டங்கள், கொள்கைகள், விருப்பங்களை மட்டும் முன்னிறுத்தாமல் இறைத்திருவுளத்தை நம் சமூகத்தில் செயலாக்கம் செய்யக் கடமைப்பட்டுள்ளோம். அதற்கானத் தூண்டுதல்தான் இயேசு கற்றுத் தந்த செபத்தின் மையத்தில் இடம் பெற்றுள்ளது.

**எங்களுக்குத் தேவையான உணவை, எங்களுக்கு இன்று அளித்தருளும். எங்கள் கடன்காரர்களை நாங்கள் மன்னித்ததுபோல *(மன்னிப்பதுபோல)* எங்கள் கடன்களையம், பாவங்களையும் மன்னித்தருளும்**

நாம் செபிக்க அடிப்படையான இருபடிநிலைகளை கடக்கக் வேண்டியுள்ளது i) நம்பிக்கை: கடவுளை நோக்கி நன்மனதோடு நாம் கேட்பவற்றை அவர் நிறைவேற்றுவார் என்ற ஆழ்ந்த பற்றுறுதி. ii) மன்னிப்பு : பகை, பழிவாங்கல், வன்மம், கோபம், அநீதி, கண்டுகொள்ளாமை போன்றத் தீமைகளில் உழன்று கொண்டே செபிப்பது போலி வேண்டல், பாசாங்குத்தனமானது. பிறரை மன்னித்தபின் செபி என உறுதிபட உரைப்பதே இவ்வாக்கியம். இயேசுவின் செபத்தை சொல்லுகையில் நாம் பாவிகள் என ஏற்கின்றோம். அடுத்ததாக, பிறரை மன்னித்தால்தான் நமது பாவங்கள் மன்னிக்கப்படும் என்று அறிக்கையிடுகின்றோம். ஏனெனில் மன்னிக்கத் தெரிந்தவர்களால்தான் கடவுளின் முகத்தைக் காண முடியும்.

**எங்களை சோதனையில் விழ விடாதேயும். தீய ஆவியினின்று மீட்டருளும் *(இரட்ச்சித்தருளும்).* ஏனெனில் அரசும், வல்லமையும், மாட்சியும் என்றென்றும் உமதே. ஆமென்.**

சோதனை என்பது ஒருவிதப் பாவ நாட்டம். நாம் பாவ நாட்டத்திற்கு அடிமையாகும் போதுதான் பாவம் நம்மை ஆட்கொள்கிறது. கடவுளோடும், சக மனிதரோடும், இயற்கையோடுமுள்ள உறவை முறித்துக் கொண்ட பாவிகள் ஆகிறோம். எனவேதான் பாவத்தில் விழச் செய்யும் சோதனையிலிருந்து மீளவும், மீட்டிடவும் கடவுளை நோக்கி இறைஞ்சுகின்றோம். இது ஒவ்வொரு தனிமனிதரும் எதிர்கொள்ளும் சோதனையை மட்டும் குறிப்பிடவில்லை. மாறாக குடும்பம், சமூகம், திரு அவை, பிரபஞ்சம் முழுவதும் சந்திக்கும் எல்லாத் தடைகள், தடுமாற்றங்கள், சவால்கள். குழப்பங்களையும் குறித்துக் காட்டுகிறது. அவைகளினின்று நம்மை மீட்டிடக் கடவுளேயன்றி வேறு யாரால் முடியும்?

## மங்கள வார்த்தை மன்றாட்டு

அன்னையாம் கன்னி மரியா தூய ஆவியாரின் செயல்பாட்டுக்கு தன்னிகரற்ற முறையில் ஒத்துழைத்தார். எனவே திரு அவை மரியாவிடமும், மரியாவோடும் ஒன்றித்து மன்றாட விழைகின்றது. மரியா இறைவேண்டலுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. ஆகவேதான் திரு அவை அவரோடு சேர்ந்து ஆண்டவரைப் போற்றவும் மன்றாடவும் விரும்புகின்றது.

**அருள் நிறைந்த மரியே வாழ்க, ஆண்டவர் உம்முடனே, பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய *ஈசோவும் (இயேசுவும்)* ஆசி பெற்றவரே!**

அருள்மிகப் பெற்ற மரியே எனும் தூதுரை மன்றாட்டு வழியாக, கன்னி மரியாவின் பரிந்துரையைத் திருஅவை வேண்டுகின்றது. இங்கே அன்னையாம் மரியா வழியாக இயேசு புகழப்படுவதோடு அவர் ஆண்டவர்தாம்' என நாம் மீண்டும் மீண்டும் அறிக்கையிடுகின்றோம். ஆண்டவரின் தூதர் நாசரேத்தில் வாழ்ந்த மரியாவை சந்தித்து மீட்பரின் பிறப்புப் பற்றியச் செய்தியை அறிவித்தபோது “இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்” (லூக் 1:31) என்றே சொன்னார். இயேசு எனும் பெயருக்கு “கடவுள் மீட்கிறார்” என்பது பொருள். இப்பெயர் அவரது தனித்துவத்தையும் பணியையும் உள்ளடக்கியது. இனி இயேசு எனும் பெயருக்குப் பதிலாக ஏன் ஈசோ என சொல்கின்றோம்?

கீழே திருச்சபையின் திருவழிபாட்டு மொழி என்பது சுரியானி ஆகும். இம்மொழியில் ‘இயேசு கிறிஸ்து’வை ‘ஈசோ மெசியா’ என்று அழைக்கிறோம். நமது எல்லா திருவழிபாட்டு

நூல்களிலும் 'ஈசோ' என்ற வார்த்தையே பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு நமது முன்னோர்களும் இப்பொழுது நாமும் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது 'ஈசோ மெசியாவுக்கு புகழ்' என்று வாழ்த்து கூறுகிறோம். எனவே "இயேசு" என்ற பெயருக்கு பதிலாக 'ஈசோ' என்ற பெயர் நமது வழிபாட்டு முறைகளில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

**புனித மரியே** ***(அர்ச்சிஷ்ட மரியாயே),*** **இறைவனின் தாயே** ***(சர்வேசுரனுடைய மாதாவே),*** **பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும். ஆமென்.**

மங்கள வார்த்தை செபத்தின் முதற்பகுதி முழுவதும் திருவிவிலியம் சார்ந்தது. அதன் இரண்டாம் பகுதி திரு அவையின் பிரகடனமாக உள்ளது.

கி.பி. 3 மற்றும் 4 - ஆம் நூற்றாண்டுகளில் அன்னை மரியா பற்றியப் பல்வேறு தப்பறைக் கொள்கைகள் பரவி வந்தன. அதனில் ஒன்றுதான் 'மரியா இயேசுவின் தாய் அவர் இறைவனின் தாய் அல்ல' என்பது. எனவே கி.பி. 431 - இல் திரு அவைத் தந்தையரால் எபேசு சங்கம் கூட்டப்பட்டு "மரியா இறைவனின் தாய்" எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. மீட்பரை உதரம் சுமந்ததால் புனிதம் நிறைந்த கன்னி மரியாவை "இறைவனின் தாய்" என்று அழைப்பது மிகவே பொருத்தமானது.

புனித மரியே, இறைவனின் தாயே என்ற இப்பகுதி 5 - ஆம் பயஸ் எனும் திருத்தந்தையால் 1568 -ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டது. இப்பகுதி வழியாக நாம் அன்னை மரியாவின் மாண்பை அறிக்கையிடுகின்றோம். நமது பாவ நிலையை உளமார உணர்ந்து ஏற்கின்றோம். நம்மை வீழ்த்தும் பாவச் சூழல்களிலிருந்து விடுபட மரியாவின் பரிந்துரை வாழ்வின் இறுதி மூச்சுவரை நமக்குத் தேவைப்படுகின்றது. இதனை உணர்த்துவதே மங்கள வார்த்தை மன்றாட்டின் இறுதிப் பகுதி.

## திருப்பலியில் சொல்லும் ஈசோ கற்பித்த செபம்

இச்செபத்தின் இடையே பயன்படுத்தப்படும் (*உமது மகிமையால்)* என்ற சொல் இனி **உமது மாட்சியால்** எனச் சொல்லப்படும்.

இங்கே 'மகிமை' என்ற சொல் 'மாட்சி' என உருவேற்றம் பெற்றுள்ளது. மாட்சி என்றால் 'மிகக் கனம் பொருந்திய', 'எந்த வெற்றிடம் இல்லாமல் முழுமையான' என்று பொருள்

கொள்ள வேண்டும். மாட்சி என்ற சொல் வெறுமனே இறைப்புகழ்ச்சிக்கானது மட்டுமல்ல அது சமூக, சமய மறுமலர்ச்சியை உருவாக்கத் துணைபுரிகின்றது. எனவேதான் ‘உமது மாட்சியால்’ என்ற சொல்லாடலைக் கையாள்கின்றோம்.

**தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக** என்ற மூவொரு கடவுள் புகழில் மக்கள் பதிலுரையாக இருந்த ***(ஆதிமுதல்)*** எனும் சொல் **தொடக்கமுதல்** என்று இனி சொல்லப்பட வேண்டும்.

அனைத்திலும் கடவுளே முதன்மையானவர். அவர்தான் அனைத்திற்கும் தொடக்கமும் முடிவும். எல்லா நன்மைகளின் ஊற்றும் ஊரணியும் அவரே. நமக்கும் நாம் காணும் படைப்பிற்கும் தொடக்கம் அவரிலிருந்தே உருவானது. எனவே கடவுளின் மீட்புத் திட்டம் படைப்புச்செயல் வழியாகத் தொடங்கிவிட்டது. அச்செயல் இன்றும் தொடர்கின்றது என்பதும் உண்மை. அந்த மேன்மையான கடவுளின் மாட்சியைப் பறைசாற்றவும், நம்பிக்கையோடு அறிக்கையிடவுமே ஷதொடக்கமுதல்’ என்ற சொல்லாட்சியைப் நாம் பயன்படுத்த உள்ளோம்.

மேற்காணும் இம்மாற்றங்கள் உள்ளடக்கிய செபங்களை 2021, ஜூலை 18 - நாள் முதல் நமது மறைமாவட்டத்தில் நிறைவேற்றப்படும் எல்லா திருப்பலிகளிலும் ஏனைய வழிபாடுகளிலும் பயன்படுத்துவோம். இச்செபங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய வழிமுறைகளை அருட்தந்தையர் மேற்கொள்ள அன்போடு வேண்டுகின்றேன்.

இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

ஆயர் இல்லம்

14.07.2021

என்றும் ஈசோ மெசியாவில்

**✞ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

*குறிப்பு: இவ்* ஆயர் திருமுகத்தை ஜூலை 18, 2021 ஞாயிறு *அன்று அனைத்து பங்குகளிலும்* திருப்பலி இடையே வாசிக்கவும்.